<u>செய்தி வெளியீடு</u>

<u>நாள் 03.11.2023</u>

**கணேஷ் நகர் 230/33 கி.வோ. வளிமக்காப்பு துணை மின் நிலைய கட்டுமானப்பணிகளை மாண்புமிகு மின்துறை, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.**

கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 13.05.2023 அன்று துவக்கி வைக்கப்பட்ட கணேஷ் நகர் 230/33 கி.வோ. வளிமக்காப்பு துணை மின் நிலைய கட்டுமானப்பணிகளை மாண்புமிகு மின்துறை, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் நேரில் சென்று ஆய்வு செய்தனர். இத்திட்டம் ரூ.110.92 கோடி மதிப்பீட்டில் மின்தொடரமைப்பு கழகத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மேற்கொள்ளப்பட்டு வரும் பணி நிலை குறித்து விரிவாக மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வு செய்தனர். விரைவில் அனைத்து பணிகளை முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். மேற்கண்ட துணைமின் நிலையம் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு வரும்பொழுது கணேஷ் நகர், நேர்மை நகர், கொளத்தூர், அன்னை நகர், பெரியார் நகர் மற்றும் விநாயகபுரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 3.19 இலட்சம் பொதுமக்கள் பயன்பெறுவர்.